அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 04 /2018
தேதி : 12.01.2018

**100 வது செயற்கைகோளை விண்ணில் செலுத்தியிருக்கும் சாதனை!**

**இஸ்ரோ நிறுவனத்திற்கு அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ரா.சரத்குமார் வாழ்த்து.**

இஸ்ரோ நிறுவனம், இன்று பி.எஸ்.எல்.வி- சி-40 ராக்கெட்டை விண்ணில் செலுத்தி, அதன்மூலம் இந்தியாவின் 100 வது செயற்கைக்கோளான கார்டோசாட்-2 என்ற செயற்கைகோளை அனுப்பி மகத்தான சாதனை புரிந்திருப்பது நமக்கெல்லாம் மகிழ்ச்சியளிப்பதாகவும், பெருமிதமாகவும் உள்ளது.

இத்தகைய மகத்தான சாதனையை எட்டிப் பிடிப்பதற்கு, இஸ்ரோ நிறுவனத்தில் தொடக்கத்தில் இருந்தே உழைத்த மூத்த விஞ்ஞானிகள் தொடங்கி, இன்றும் அயராது உழைத்துக்கொண்டிருக்கும் விஞ்ஞானிகள் மற்றும் அனைத்து அதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர்களுக்கும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா உயரிய நிலையை அடைந்திருக்கும் நிலையில், 100 என்ற எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்து, இஸ்ரோ நிறுவனம் மேன்மேலும் சாதனைகள் புரியவேண்டும் என்றும் வாழ்த்துகிறேன். விண்வெளி ஆராய்ச்சியில் இத்தகைய சாதனைகள் படைக்க ஏதுவாக தொடர்ந்து ஊக்கம் அளித்துவரும் மத்திய அரசுக்கும் நன்றியை உரித்தாக்குகிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com